# சத்திமுத்தப் புலவர்

## 1

**இடம் :** மாளிகை, மன்னி (அரசி) அறை
**காலம் :** வேனில், மாலை
**காட்சி உறுப்பினர் :** பாண்டியன்...பாண்டியன் மன்னி.

பாண்டியன் : மங்கையே மாளிகைக்கு
வந்து நிற்கின்றது
திரும்பிப்
வந்து
இவ்வெயிலை
பொறுத்திருப்

நேர்
தேர்
பார்
சேர்
யார்
பார்?

மன்னி : ஆம் அத்தான். வெப்பந்தணிக்கும்
மாமரச்
மணமலர் மூலைக்கு
அதைவிட இங்கென்ன
அடடா வெயில் உரிக்கிறது

சோலை
சாலை
மூலை
வேலை?
தோலை!

[புறப்படுகிறார்கள்]

பாண்டியன் : புறப்பட்டு விட்டாயா!
கையோடு கை
மெய்யோடு மெய்
நடந்து வா!
நிற்கும் தேரிலேறு பார்த்துப்

கோர்த்து
சேர்த்து
காத்து
பார்த்து

[அணைத்து ஏற்றிவிடுகிறான்]

மன்னி : நீங்கள் ஏற என்ன
நசுங்கி விடாது என்
குதிரை தொடங்கட்டும் பெரு
பாகனுக்குக் கொடுங்கள்

தடை
துடை
நடை
விடை

### பாட்டு

பாண்டியன் : மனங்குளிர இளம் பரிதி
நடம் பயில ஓட்டடா
குளம்படிகளின் சதங்கை ஒலி
ததும்ப இனி ஓட்டடா,
நீட்டியதோர் சாட்டை நுனி
காட்டி இனி ஓட்டடா
கூட்டம் நட மாட்டமது
பார்த்தபடி ஓட்டடா.

பாட்டு

மன்னி : சாலை முடி வானவுடன்
சோலையினைக் காணலாம்;
மாலையில் உலாவி நலம்
யாவுமினிப் பூணலாம்.
[தேர் செல்லுகிறது]

## 2

இடம் : சோலை.

காலம் : வேனில், மாலை.

காட்சி உறுப்பினர்கள் : பாண்டியன்...பாண்டியமன்னி.

பாண்டியன் : பெண்ணே
சோலையைக் காண நேர்ந்தது.
தேர் வந்து சேர்ந்தது.
தொல்லை தீர்ந்தது.
உலவும் வேலை நம்மைச் சார்ந்தது.
தென்றல் ஆர்ந்தது
அதில் மணம் ஊர்ந்தது
தெவிட்டாது பாடுவதில்
அந்தத் தேன்சிட்டுத் தேர்ந்தது!

மன்னி : தேடிக் கொண்டிருக்கும்
மணிப்புறா ஊடிக் கொண்டிருக்கும்
அதன் பெட்டை வாடிக் கொண்டிருக்கும்
இரண்டுள்ளமும் ஒன்றையொன்று
நாடிக் கொண்டிருக்கும்
பின் கூடிக் கொண்டிருக்கும்
கூடிக் கூட்டில் பாடிக் கொண்டிருக்கும்
அட்டா முந்திய கிளியோ ஆடிக் கொண்டிருக்கும்
அழகிய ஊஞ்சல்! [சிறிது விலகி

பாண்டியன் : காண்பாய் செவ்வாழையின் காய்
கண்டு திறந்தது மந்தியின் வாய்
மடிவிட்டுப் பிரிந்தது அதன் சேய்
அதோ உதிர்ந்தது சருகு
மான் குட்டிப் பாய்
அது "மடி சாய்''
என்று வேண்டத் தாய்
பால்தரும் அதனிடம் போய்
தாங்குமோ உன் கால் நோய்?
[பின்னும் சிறிது விலகி]

மன்னி : அஆ! மிகப் பெரிய குளம்
சுற்றிலும் புதர்ப்பூக்கள் என்ன வளம்
தாமரை இலைக்கம் பளம்
அதன்மேல் நீர்முத்து வயிரமடித்த வளம்!
வியப்படைகின்றது என் உளம்!
[மற்றொருபுறம் போய்.]

பாண்டியன் : வண்டுகள் இசையரங் காக்கியது ஊரை!
அல்லியும் தாமரையும் அப்படியே
மறைத்தது நீரை!
துள்ளுமீன் அசைத்தது அவற்றின் வேரை.

மன்னி : ஏன் அத்தான் தாமரை அரும்பா சாரை?

அஞ்சுவதைப் பாருங்கள் அந்தத் தேரை?
[நரைகளைப் பார்த்து ]

பாண்டியன் : பெண்ணே பார் நாரை நாரை நாரை.
அந்த நாரையின் தோற்றம் பார்?
வெண்ணிலவு மண்ணுலகுக் களித்த
காணிக்கை போல
பேணிக் கொள்வார்க்கும்
காணற் கியலாது அதன் மாணிக்கக் கால்.

மன்னி : ஆம், அத்தான் காலில் காணப்படும்
செந்நிறத்திற்கு ஒப்பாக
மாணிக்கத்தைக் கூறினீர்கள் அல்லவா?
அதன் உடலை நான் சொல்லவா?
வெண்ணிலவும் அதை வெல்லவா
முடியும்? என் நல்அவா
ஒன்றே ஒன்று!

பாண்டியன் : நன்றே, சொல் இன்றே!

மன்னி : நாரையின் கூர்வாய் கண்டீர்களா?
அது எதுபோல் இருக்கிறது விண்டீர்களா?

பாண்டியன் : கூர்வாய்க்குச் சிறந்த
ஒப்பனை கூற மறந்தேனா!
அறிவு துறந்தேனா!
அல்லது நான் இறந்தேனா!

மன்னி : அத்தான் அதன் கூர்வாய் காணும்போது
எதைச் சொன்னால் தோது?
கத்தரிக் கோல்போல் என்றால்ஏன் ஒவ்வாது
பாண்டியன் ; ஏது?
முடியாது.

மன்னி : திரண்டு இருக்கிறது நாரையின் அலகு

பாண்டியன் : சப்பைக் கத்தரிக்கோலை இணை உலகு?
சொன்னால் ஏற்குமோ நண்ணுவோம்
பெண்ணே மாளிகை
இதைப் பொறுமையுடன்
எண்ணுவோம்.

[போகிறார்கள்.]

## 3

இடம் : புலவர் இல்லம்; சத்திமுத்தச் சிற்றூர்.

காலம் : காலை

காட்சி உறுப்பினர் : சத்திமுத்தப் புலவர், அவர் மனைவி.

மனைவி : எதைக் கொண்டு அரிசி வாங்குகின்றது?
அடுப்பில் பூனை தூங்குகின்றது.
பெரிய பையன் கண்ணில் நீர் தேங்குகின்றது.
கைப்பிள்ளை பாலுக்கு ஏங்குகின்றது.
சொன்னால் உங்கள் முகம் சோங்குகின்றது.
எப்படிச் சாவைத் தாங்குகின்றது.
இப்படியா உங்கள் தமிழ் ஓங்குகின்றது?

புலவர் : என் தந்தை தாய் தேடி வைத்த கோடி
பொருள் வாடி
பசியால் நாடி
என்னை
என்மேல் பாடிப் புகழ்ந்த
புலவர்க்கு அள்ளிக் கொடுத்தேன் ஓடிஓடி.
இன்று பசிக்குப் பருக உண்டா காடி?
ஒரு துளி புளித்த நாடி.
நினைத்தால் தளர்கின்றது என்

மனைவி : நீங்கள் ஏன் அரசரிடம் போகக் கூடாது?
நம் வறுமை ஏன் ஏகக் கூடாது?
ஏன் சொல்லுகிறேன் எனில்
என் மக்கள் உள்ளம் நோகக் கூடாது.
அதனால் நான் சாகக் கூடாது.

புலவர் : பசியானது துன்பக் கடல்
அதில் துடிக்கும் உன் உடல்?
கொதிக்கும் மக்கள் குடல்
எப்படி முடியும் இந்த நிலையில்
உங்களை விட்டு வெளியில் புறப் படல்?

மனைவி : வேறென்ன வழி?
சரியல்லவா என் மொழி?
செல்லா விடில் வருமே பழி?

புலவர் : அண்டை வீட்டில் அரைப்படி கைமாற்று
அரிசி யாற்று.
வாங்கிப் பசி
நாளைக்குக் கொடுத்து விடுவோம் ஏமாற்று?
நம்மிடம் ஏது

நேற்று.

மனைவி : வாங்கியாயிற்று

ஒப்புவாள்
புலவர் : புலவர் வீட்டுக்காரி தர கேள்
சென்று தோள்
கூசலாகாது உன் தேள்!
பசியோ கடுக்கும்

நாள்
மனைவி : கேட்டாயிற்றே முந்தா

பிடித்து
புலவர் : மக்களைக் கட்டிப் படுத்துப்
அருகில் தடுத்துக்
போகும் உயிரைப் போகாது கொடுத்துப்
கொண்டிரு!
போக ஒன்றுமில்லை.
உங்களை வெறுங்கையோடு விடுத்துப் போகிறேன்.

4

**இடம் :** காட்டு வழி.

**காலம் :** மாலை.

**கதை உறுப்பினர் :** புலவர், மாடு மேய்க்கும் சிறுவன் வழியில்

புலவர் :

பாட்டு

படும் பாட்டை அறியாத பசிநோயே
நெடுங் காட்டில் வந்து மூண்டாயே!
எலலாம் இருக்கின்ற திருநாடே
இல்லாமை தீருமா இனிமேலே!

ஆட்டுக்காரத்
புலவர் :
தம்பி

பாட்டுக்கார
பையன் : ஏன்
அண்ணா?

நகரம்?
புலவர் : எது

அகரம்
பையன் : இது

பாட்டை?
புலவர் : எது

பையன் : அதோ மேட்டை
அடுத்த கள்ளிக் காட்டைத்
தாண்டி ஓர் ஓட்டைப்
பிள்ளையார் கோயில்! அதன் சோட்டைப்
பிடித்தால் அடையலாம் ஒரு மேட்டை!
அங்கிருந்து பார்த்தால் தெரியும் கோட்டை.

புலவர் : தம்பி நன்றி.

பையன் : ஒதுங்கிப்போங்க, அதோ பன்றி
நடவுங்கள் கவலை இன்றி.

புலவர் (பாட்டு)

நள்ளிருள் வந்ததுவோ—பெண்டு
பிள்ளைகளின் நிலை எதுவோ?
கொள்ளிநிகர் பசிநோயால் பறந்தாரோ—அவர்
கொண்டதுயர் தாங்காமல் இறந்தாரோ!
உள்ளதொரு பாண்டிநகர் அடைந்தேனே—நான்
ஒருகாத எல்லை கடந்தேனே!
தள்ளாடித் தள்ளாடி நடந்தேனே—நோய்
தாங்காமல் இருகாலும் ஒடிந்தேனே!
தேரடியில் இன்றிரவு கழிப்பேனே—இரவு
சென்றவுடன் காலையில் விழிப்பேனே!
பாராளும் பாண்டிமா நாட்டின் மேல்
பாடியே என் வறுமை ஒழிப்பேனே.
[தேரடியில் படுத்துக் கொள்ளுகிறார் ]

## 5

**இடம் :** பாண்டி மாநகர்.

**காலம் :** இரவு.

**கதை உறுப்பினர் :** புலவர், பாண்டியன், அமைச்சன்.

அரசன் : அமைச்சரே ஊரில் திருட்டு
வஞ்சப் புரட்டுத்
தீயவர்களின் உருட்டு
நடக்கின்றனவா என்றறியும் பொருட்டுச்
சுற்றி வருகின்றோம் இந்த இருட்டு
வேளையிலும்.

அமைச்சன் : அதனால்தானே இவ்வாறு துணிந்து
இந்த மாற்றுடை அணிந்து
பெருங்குரல் தணிந்து
நகர்வலம் வருகின்றோம்.

அரசன் : தெற்குத் தெரு நீங்கி
வடக்குத் தெரு நோக்கி
மேற்கில் கருத்தைப் போக்கி
வருகின்றோம் தேரோடும்
தெருவே பாக்கி.

அமைச்சன் : அரசே நாரை! நாரை!
எப்பக்கத்து நீரை
எண்ணி இந்நேரத்தில் தேரைக்
கடந்து போகின்றது இந் நாரை?

ஒரு குரல் : 'நாராய் நாராய் செங்கால் நாராய்'

பாண்டி : யாருடைய குரல் பாராய்
தேரடியிலிருந்து வருகின்றது நேராய்
உற்றுக் கேட்பாய் வாராய்
எனக்குத் தோன்றுகிறது
அகவற் சீராய்.

ஒரு குரல் : 'பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!

பாண்டி : அடடா பெற்றேன்
கூர்வாய்க்கு உவமை கற்றேன்
இன்பம் உற்றேன்!

ஒரு குரல் : 'நீயும் உன் மனைவியும்
தென்றிசைக் குமரியாடி வடதிசைக்
கேகுவீ ராயின் எம்மூர்ச்
சத்திமுத்த வாவியுள் தங்கி,
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்கும் என் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே'

பாண்டி : அமைச்சே! பனங்கிழங்கு பிளந்ததுபோன்
றிருக்கிறது நாரையின் கூர்வாய் என்பதற்கு,
'பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக்கூர் வாய்' என்றார்.

அமைச்சர் : மற்றும் அச்செய்யுளின் பொருளை உணர்ந்தீரா?
பறந்து சென்ற நாரையைத் தம்மனைவிக்குத்
தூது விடுகின்றார்: எப்படி?

பாண்டி : நாரையே, நீயும் உன் மனைவியும் தெற்கிலுள்ள கன்னியா குமரியுள் மூழ்கி வடதிசைக்குச் செல்வீராயின் அங்கே சத்திமுத்தம் என்னும் எங்கள் ஊரில் தங்கி என் மனைவியிடம் என் நிலையைக் கூறுவாய் என்கிறார்.

அமைச்சர் : தம் மனைவி அங்கு என்ன நிலையில் இருப்பாளாம் என்றால், நனைந்த சுவருள்ள கூரையில் இருக்கும் பல்லி, தன் கணவன் 'வந்து விடுவான்' என்று கூறுவதை எதிர்பார்த்திருப்பாளாம். அப்படிபட்டவளிடம் நாரை என்ன சொல்ல வேண்டுமாம்? "பாண்டியன் ஆளும் மதுரையில் ஆடையில்லாமல் குளிர் காற்றில் மெலிந்து, கையால் உடம்பைப் பொத்திக் கொண்டு, காலை உடலால் தழுவிப் பெட்டியில் அடைந்த பாம்பு போல் மூச்சுவிடும் ஏழையான உன் கணவனைக் கண்டேன்'' என்று கூற வேண்டுமாம்; என்னே வறுமையின் கொடுமை, என்னே அரும் புலவரின் இரங்கத்தக்க நிலை! நாழிகையாகிறது. அவரை அழைப்போம்!

பாண்டி : குறட்டை விடுகிறார்; எழுப்பலாகாது. இதோ என் போர்வையால் அவர் உடம்பைப் போர்த்து விடுகிறேன். போவோம். விடியட்டும். காவற்காரர்களை அனுப்பி அழைத்துக் கொள்வோம்.

## பாண்டியன் பள்ளிஅறை

மடிந்தது
மன்னன் : இருள் ஒடிந்தது
கூவும் சேவல் கழுத்தோ படிந்தது!
கதிரொளி எங்கும்
வந்தீர்கள்!
அரசி : இரவு தான் தூங்கியபின் போலும்!
வேலும்
வழிபார்த்திருந்தன என் இருவிழி காலும்
உலாவி அலுத்தன என் இரு நாலும்!
துவண்டு போயிற்று என் இடை பாலும்!
ஆறிப் போயிற்றுப் தோலும்
அழகு குன்றின முப்பழத் நாலும்
வாடின கட்டிலில் மலர்வகை ஏலும்
கண்விழிக்க எவ்வாறு
விடு
மன்னன் : அதை கொடு
காது தொடு
கருத் நடு
ஒரு புலவர் ஊரின் விடு
உத
கின்ற மடு
கவிதைத் தேனைச் செவி படு
நுகர்ந்து மனம் நிறை
நாராய் நாராய்...
...எனுமே என்றார்!

அரசி : ''பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன'' அணி!
ஆ! என்ன பணி!
மறக்க முடியாத கவிதைப் மணி!
வந்திருக்கிறாரா அப்புலவர்

மன்னன் : விரைவில் வர அழைப்போம்
அவர் வரவால் உயிர் தழைப்போம்
அவருக்குப் பெருந்தொண் டிழைப்போம்
நாம்.

## பாண்டியன் மன்றம்

பாண்டி : வேவுக்காரரே இரவில் நகரைச் சுற்றிச்
சுற்றிக் கால் நொந்தேன்.
தேரடி அருகில் வந்தேன்
என் போர்வை காணாமற்
போகவே உள்ளம் நொந்தேன்
கள்ளனைத்தேட உமக்குக் கட்டளை தந்தேன்.

வேவு : அரசே போர்வையின் இன்னபடி
அடையாளம் சொன்னபடி
என்றால்
செய்வோம்!

பாண்டி : இழை அனைத்தும் பொன்னே
அதன் நிறம் மின்னே
முத்துத் தொங்கும் முன்னே!
அதன் அழகு என்னே!
என்னே!

வேவு : இன்னே
செல்கின்றோம் எங்கள் மன்னே!

பாண்டி : ஒன்றை மட்டும் நீ மறந்து விடாதே
கள்ளன் அகப்பட்டால் விடாதே
ஆயினும் அவனுக்குத் தொல்லை கொடாதே
ஐயோ ஏதும் அடாதே
பேசப் படாதே

வேவு: அரசே மறவேன் உன்னும் உவணை
மறப்போனா தங்கள் ஆணை
செய்யேன் சிறிதும் கோணை

அரசன் : ஏன் சுணக்கம்?

வேவு: அரசே வணக்கம்
[போகிறார்கள்]

புலவர் : பன்னாடை
போன்ற என்னாடை
கண்டிந்தப் பொன்னாடை
போர்த்தவர் எவர்?
இந்தா துணி
இதை அணி
என்கிறார் என் பசிப் பிணி
சிறிது தணி
என்கிறாரா! இல்லையே!
வறுமை தனக் குரியவில்லை
எடுத்து வாட்டியும் என்னுயிர் பிரியவில்லை
என் குடும்பநிலை அவர்க்குத் தெரியவில்லை
அரசனிடம் போக வழி புரியவில்லை.
[எதிரில் வருவோனைப் பார்த்து.]
என்ன! அவன் ஏன் பார்க்கிறான்
என்னை உற்று
வேறுவேலை அற்று
என்மேல் அவனுக்கென்ன பற்று
அவன் தலைப்பாகையோ இருபது சுற்று
மீசையோ முருங்கைக்காய் நெற்று
நானும் நிற்கிறேன் சற்று.

வேவு: யார்? வை
இது அரசர் போர்வை!
என்ன செய்யும் உன் பார்வை?
கேள் அரசனின் தீர்வை
இப்படிக் காலை நேர்வை.
என்ன உன் முகத்தில் வேர்வை?

புலவர்: விடிந்தது கிடந்தது என்மேல் இப் போர்வை?
இது மெய்.
என்வாயில் வராது பொய்
தலையைக் கொய்
வேறேது செய்யினும் செய்.

வேவு : வாய்ப் பேச்சுத்தான் நெய்
நடத்தை என்னவோ நொய்
அரசர் மன்னித்தால் உய்
இல்லாவிடில் உன் உயிரைக்
கொலைக் களத்தில் பெய்
நட.

## பாண்டியன் மன்று

அரசர் : நீர் இருப்பது எந்த நத்தம்?

புலவர் : சத்தி முத்தம்.

அரசர் : உம்தொழிலா அயலார் உடைமையை நாடுவது?

பாடுவது?
புலவர் : இல்லை
ஏது?
அரசர் : போர்வை
யாது.
புலவர் : தெரி
போது
நான் விழித்த
மீது.
இடந்துஎன்

அரசர் : அமைச்சரே இவரைத்
தள்ள வேண்டும்.
தனிச் சிறையில்
கொள்ள வேண்டும்
அமைச்சர் : அரசே ஏன் பதட்டம்
விள்ளவேண்டும்
கடுமொழி ஏன்
துள்ள வேண்டும்?
ஆராயாது ஏன்
சிறை!
அரசர் : புலவரே! நீர் அடைய வேண்டுவது
சிறை?
புலவர் : எனக்கா
முறை?
என்ன
இறை
நீரா ஓர்
குறை.
ஆய்ந்தோய்ந்து பாராதது உம்
போகவேண்டும்
அரசர் : சிறைக்குத்தான்
நோகவேண்டும்?
ஏன் என்னை
சாகவேண்டும்?
புலவர் : இப்படியா நான்
வானது.
அரசர் : தீர்ப்பு முடி
ஏனது?
புலவர் :
போனது?
அரசர் : என் உரிமை எங்கே
நானது,
புலவர் : செய்தறியேனே
சென்று.
அரசர் : அமைச்சரே சிறைப்படுத்துவீர்
நன்று.
அமைச்சர் :

## அரண்மனையில் ஓர் அறை

காவல் : புலவரே இதுதான் நீர்
அறை.
இருக்கவேண்டிய
சிறை?
புலவர் : இதுவா
போம்.
காவல் :
நாம்
புலவர் : போகின்றோம்
(சுற்று முற்றும் பார்த்து)
தட்டுமுட்டு
பொன்னால்
பட்டு
திரையெல்லாம்
மெட்டு
கேட்கும் பாடலெல்லாம் புதிய
கொட்டு
முரசின்

இதை விட்டு
இருபுரம் சென்றால் தங்கத் தட்டு
அதில் மணிகள் இட்டு
காட்டி வைத்துள்ளார் பகட்டு
தூண்களெல்லாம் மின் வெட்டு
அவற்றின்மேல் பறப்பன போலும் சிட்டு
சிறையில் இருக்க வேண்டியது பொத்து
விளக்கு
இங்குள்ளனவோ பத்து விளக்கு
அனைத்தும் கொத்து விளக்கு
நடுவில் தரையில் தங்கக் குத்துவிளக்கு
சிறையில் தருவது தரை மட்டில்
இது தங்கக் கட்டில்
அருகில் பலவகை வட்டில்
பாவை ஆடும் தொட்டில்
இங்கில்லை செத்தைப் படுக்கை
இங்கிருப்பது பஞ்சு மெத்தைப் படுக்கை
இங்கு ஏசலும்
வசைகள் பேசலும்
மொய்க்கும் ஈசலும்
இல்லை. பொன் னூசலும்
மணம் வீசலும்
காணக்கண் கூசலும்
உண்டு.

காவல்: (வந்து) புலவரே இதோ சோறும்
மிளகின் சாறும்
கறிகள் பதி னாறும்
அள் ளூறும்
பண்ணியங்கள் வேறும்
உள்ளன. பசி யாறும்
இன்னும் வேண்டுவன கூறும்

புலவர்: குறுக்கே ஒரு சொல் கேட்டு விடுங்கள்; என்
மனைவி மக்களையும்
இச்சிறையில் போட்டு விடுங்கள்.

காவல்: சிரிப்புக்கு வித்து
உங்கள் எத்து!
பொறுங்கள் நாள் பத்து
அரசர் வருவார் ஒத்து.

புலவர்: போய் வருவீர் நான் சாப்பிடுகின்றேன்
பிறகு கூப்பிடுகின்றேன்.

## மாளிகை

மன்னன் : பணியாளர்களே
சத்திமுத்தம் செல்லுங்கள்
இப்பொருள்கள் புலவர்
கொடுத்தார் என்று புலவர் மனைவியிடம்
போய்ச் சொல்லுங்கள்
வழியில் திருடர் வந்தால்
அவர்களை வெல்லுங்கள்
பணியாள் : அப்படியே அரசே! நடவுங்கள்

அரசர் : பொழுதோடு இடையில் காட்டைக் கடவுங்கள்

பணியாள் : அரசே கும்பிடுகின்றோம்.
தங்கள் பேச்சை நம்பிடுகின்றோம்.

பணியாள் : பாகனே! யானையை ஓட்டு
அடே வண்டியைப் பூட்டு
உன் நடையை நீட்டு,
தலையில் மூட்டையைப் போட்டு
சில்லரைச் சாமான்களையெல்லாம் கூட்டு
கத்தியைத் தீட்டு
உறையில் போட்டு
இடையில் கட்டிக் காட்டு
நடவுங்கள் என் சொல் கேட்டு
பார்த்து நடவுங்கள் உளை
சுமையைத் தடுக்கிறது பார் கிளை
அவிழ்கின்றது பார் வண்டிமாட்டின் தளை
இறுகட்டுமே குரல் வளை
வரிசையாய் ஓட்டுங்கள் குதிரை களை
ஆர் தம்பி தில்
சத்திமுத்தம் இன்னும் எத்தனை கல்?
தெரிந்தால் சொல்?
இது என்ன புல்?

தம்பி : இல்லை அது நெல்.
சத்தி முத்தத்திற்கு அந்த வாய்க்காலைத்
தாண்டி செல்

பணியாள் : ஏனையா சத்திமுத்தப் புலவர் வீடு
எங்கே உண்டு?
அவருடைய பெண்டு
இருந்தால் கண்டு
புலவர் கொடுத்ததாக விண்டு
இவைகளைக் கொண்டு
சேர்ப்பது எம் தொண்டு

தம்பி : ஐயா, அதோ தெரிகிறதே மச்சு
அதன் அண்டையில் இருக்கிற குச்சு

பணியாள் : புலவர் வீடு பூட்டியிருக்கிறதே
உள்கொக்கி மாட்டியிருக்கிறதே

தம்பி : தட்டு
ஒலி லொட்டு லொட்டு

தம்பி : அவர்கள் இருப்பது அந்தக் கட்டு

பணியாள் : உம்! கையிலே கிடையாது ஒரு துட்டு
இதில் அவர்கட்குமுன் கட்டு
பின் கட்டு
படிக் கட்டு
அதை மட்டு
விடு! அந்த மட்டு.

பணியாள் : அம்மை அம்மை அம்மை

பிள்ளை : அம்மா! அழைக்கின்றார்கள் உம்மை.

புலவர் மனைவி : யார் அழைப்பார் நம்மை.

பணியாள் : திறவுங்கள் தாளை

பு.மனைவி : காசில்லாத வேளை

பணியாள் : பார்த்துப் பேசுங்கள் ஆளை

பு.மனைவி : உங்கள் கடனைத் தீர்க்கிறேன் நாளை.

பணியாள் : கேளுங்கள் எம் சொல்லை.

பு.மனைவி : இப்போது காசு கையில் இல்லை.

பணியாள் : இதென்ன தொல்லை.
புலவர் எம்மை விடுத்தார்.

பு.மனைவி : ஓகோ என்ன கொடுத்தார்.

பணியாள் : மாணிக்கச் சுட்டி
காப்பு கொலுசு கெட்டி!
காலுக்கு மெட்டி,
மற்றும் நகைகள் வைக்கப் பெட்டி,
வெள்ளிச் சட்டி,
பழத்தித்திப்புத் தொட்டி.
தங்கக் கட்டி
யானைக் குட்டி,
மிக நீளம் அம்மா இந்தப் பட்டி.

பு.மனைவி : மெய்யா ஐயா?

பணியாள் : ஐயையோ பொய்யா?

பு.மனைவி : உடை!

## மாளிகை

மன்னன் : பணியாளர்களே
சத்திமுத்தம் செல்லுங்கள்
இப்பொருள்கள் புலவர்
கொடுத்தார் என்று புலவர் மனைவியிடம்
போய்ச் சொல்லுங்கள்
வழியில் திருடர் வந்தால்
அவர்களை வெல்லுங்கள்
பணியாள் : அப்படியே அரசே! நடவுங்கள்

அரசர் : பொழுதோடு இடையில் காட்டைக் கடவுங்கள்

பணியாள் : அரசே கும்பிடுகின்றோம்.
தங்கள் பேச்சை நம்பிடுகின்றோம்.

பணியாள் : பாகனே! யானையை ஓட்டு
அடேட வண்டியைப் பூட்டு
உன் நடையை நீட்டு,
தலையில் மூட்டையைப் போட்டு
சில்லரைச் சாமான்களையெல்லாம் கூட்டு
கத்தியைத் தீட்டு
உறையில் போட்டு
இடையில் கட்டிக் காட்டு
நடவுங்கள் என் சொல் கேட்டு
பார்த்து நடவுங்கள் உளை
சுமையைத் தடுக்கிறது பார் கிளை
அவிழ்கின்றது பார் வண்டிமாட்டின் தளை
இறுகட்டுமே குரல் வளை
வரிசையாய் ஓட்டுங்கள் குதிரை களை
ஆர் தம்பி நில்
சத்திமுத்தம் இன்னும் எத்தனை கல்?
தெரிந்தால் சொல்?
இது என்ன புல்?

தம்பி : இல்லை அது நெல்.
சத்தி முத்தத்திற்கு அந்த வாய்க்காலைத்
தாண்டி செல்

பணியாள் : ஏனையா சத்திமுத்தப் புலவர் வீடு
எங்கே உண்டு?
அலகுடைய பெண்டு
இருந்தால் கண்டு
புலவர் கொடுத்ததாக விண்டு
இவைகளைக் கொண்டு
சேர்ப்பது எம் தொண்டு

தம்பி : ஐயா, அதோ தெரிகிறதே மச்சு
அதன் அண்டையில் இருக்கிற குச்சு

பணியாள் : புலவர் வீடு பூட்டியிருக்கிறதே
உள்நோக்கி மாட்டியிருக்கிறதே

— தட்டு

தம்பி :
ஒலி லொட்டு லொட்டு

தம்பி : அவர்கள் இருப்பது அந்தக் கட்டு

பணியாள் : உம்! கையிலே கிடையாது ஒரு துட்டு
இதில் அவர்கட்குமுன் கட்டு
பின் கட்டு
படிக் கட்டு
அதை மட்டு
விடு! அந்த மட்டு.

பணியாள் : அம்மை அம்மை அம்மை

பிள்ளை : அம்மா! அழைக்கின்றார்கள் உம்மை.

புலவர் மனைவி : யார் அழைப்பார் நம்மை.

பணியாள் : திறவுங்கள் தாளை

பு.மனைவி : காசில்லாத வேளை

பணியாள் : பார்த்துப் பேசுங்கள் ஆளை

பு.மனைவி : உங்கள் கடனைத் தீர்க்கிறேன் நாளை.

பணியாள் : கேளுங்கள் எம் சொல்லை.

பு.மனைவி : இப்போது காசு கையில் இல்லை.

பணியாள் : இதென்ன தொல்லை.
புலவர் எம்மை விடுத்தார்.

பு.மனைவி : ஓகோ என்ன கொடுத்தார்.

பணியாள் : மாணிக்கச் சுட்டி
காப்பு கொலுசு கெட்டி!
காலுக்கு மெட்டி,
மற்றும் நகைகள் வைக்கப் பெட்டி,
வெள்ளிச் சட்டி,
பழத்தித்திப்புத் தொட்டி.
தங்கக் கட்டி
யானைக் குட்டி,
மிக நீளம் அம்மா இந்தப் பட்டி.

பு.மனைவி : மெய்யா ஐயா?

பணியாள் : ஐயையோ பொய்யா?

பு.மனைவி : உடை!

பணியாள் : என்ன தடை!
ஒரு கடை
அப்படியே கெண்டை எடைக் கெடை

பு.மனைவி : அப்படியானால் முன்னே
கூரையின் ஓலையை
நீக்கிப் போடுங்கள் ஒரு சேலையை

பணியாள் : போட்டோம் எடுத்துக் கொண்டீர்களா?

பு.மனைவி : ஆம், உடுத்துக் கொண்டோம்
திறந்தேன். உள்ளே வாருங்கள்.

பணியாள் : நிறையப் பொருள் பாருங்கள்
இதோ மூட்டை
சம்பா நெற் கோட்டை
காணுங்கள் பெட்டிகளின் நீட்டை
அவிழ்த்து விடுகின்றோம் மாட்டை
இனிப் பெரிதாகக் கட்டுங்கள் வீட்டை

பு.மனைவி : ஆம் வெறும் ஓட்டை
என்ன என்பது இதுவரைக்கும் பட்ட பாட்டை

பணியாள் : அடைய வேண்டியது எங்கள் நாட்டை
இல்லா விட்டால் அரசர்
கிழித்து விடுவார் எங்கள் சீட்டை
பொழுதொடு திரும்பாவிடில்
திருடரின் வேட்டை
அதுவுமின்றிக் கொடியது
போகும் பாட்டை
பெரிதான வேலங் காட்டைக்
கடந்தேற வேண்டும் பெரிய மேட்டை

பு.மனைவி : கேட்க மறந்தேன் இந் நேரம்
அவர் சென்றது போன வாரம்
இது அயலார்க்கு இளக் காரம்
அவர்க்கும் இல்லை நெஞ்சில் ஈரம்
சொன்னால் என்மேல் காரம்.

பணியாள் : ஆடிப் பூரம்
கழித்தால் அங்குத் திருவிழா
ஆற்றின் ஓரம்

பு.மனைவி : அப்படியானால் எது அவர் வருநாள்?

பணியாள் : இப்போது திருநாள்
அதன்பின் ஒருநாள்
அல்லது இருநாள்

பு.மனைவி : எல்லாம் தந்தார்
அவரும் வந்தார்
என்றால் நொந்து ஆர்.
பேசுவார்?

பணியாள் : அவரிடம் சொல்லுகின்றோம்
இப்போதே செல்லுகின்றோம்.

பு.மனைவி : சாப்பாடாகிவிடும் ஒரு நொடி.
பாப்பா படி
போட்டு வடி.
பிட்டுக்கு இடி
இதென்ன பாப்பா மிளகாய் நெடி.
விரைவில் வேலையை முடி.

பணியாள் : எதற்கம்மா இது வேறு?
இருக்கிறதம்மா கட்டுச் சோறு.
இந்தப் பொழுது போய்விடும் ஒருவாறு.

பு.மனைவி : ஆய்விட்டதே.

பணியாள் : பொழுது போய்விட்டதே.

பு.மனைவி : தட்டி நடப்பதற்கல்ல நான் சொல்வது.

பணியாள் : நல்லது.

## அரண்மனை

அரசி : அத்தான், புலவரை அனுப்பி விடலாகாதா?

அரசன் : நான் அவருக்குச் செய்வது தீதா?
என் நோக்கம் தெரிவது இப் போதா?
குறை சொல்வது என் மீதா?

அரசி : வளையிலிருக்கும் நண்டு
போல, அவரைக் கண்டு
மகிழ, வீட்டுக்கும் தெருவுக்கும்
நடந்து கொண்டு
இருப்பாளே அவர் பெண்டு.
அன்றியும் குண்டு
விளையாடும் பிள்ளைகள் உண்டு
அவருக்கு
அப்பாவைக் காண அவர்
விழிகள் வருந்துமே மருண்டு!

அரசன் : கண்மணி கேள்
புலவர்க்கு வீடுகட்ட ஆள்
அனுப்பினேன் முப்பதா நாள்.

அரசி : ஓகோ குடிசையாய் இருக்கப்
படா தென்று
ஆட்கள் சென்று
மாடி வீடு ஒன்று
கட்டச் செய்தீர்களா நன்று
அத்தான் அவர் இனி ஏழை அன்று
புலவர் நின்று
இன்றாலும் அழியாது
இவர் பெற்ற செல்வக் குன்று
ஒரு பாட்டினால் அவர்தம்
வறுமையைச கொன்று
புகழ் நாட்டினார் புலவரை வென்று
அவரைத் தலைவராக்கிவிட்டார் புலவர் மன்று.

அரசர் : பெண்ணே ! புலவரில் அவர்
உயர்ந்த இனம்,

அரசி : அவர் முகம்
சென்று காண விழைகின்றது என் மனம்.

அரசன் : சரி, அவரைக் கண்டவுடன் மேலுக்குக்
காட்டுவேன் சினம்
அமற்காக நீ வருந்தினால் அது தெரியாத் தனம்

அரசி : வருந்தவில்லை உண்மையிலே

அரசர் : அப்படியானால் வா மயிலே.

## சிறை

அரசர் : பாவலரே!

புலவர் : ஏன் காவலரே?

அரசர் : என்ன வேண்டியது?

புலவர் : மன்னவா, வறுமை தாண்டியது
பெண்டு பிள்ளைகளைக் காணும் அவா தூண்டியது
அதனால் மனத்தில் துன்பம் ஈண்டியது.

அரசர் : நீர் செய்தது புலவரே கொட்டம்
ஓராண்டு சிறையிருக்க வேண்டியது சட்டம்
சிறிது தளர்த்தியது என் தட்டம்
இதற்காக உம் பேச்சோ பதட்டம்
என் ஆட்சியை
என்ன நினைக்கும் இந்த மாவட்டம்.

புலவர் : பார்க்க விரும்புகிறேன்
பார்த்துவிட்டுத் திரும்புகிறேன்
இரக்கமுள்ள மன்னவா
அப்போதுதான் தீரும் என்னவா:

அரசர் : ஆரடா பல்லக்கிப் போக்கி
இவரை இவர் ஊர் நோக்கி.
பல்லக்கில் வைத்துத் தூக்கி
சென்று இவர் அவாவை நீக்கி
வாருங்கள்.

அரசர் : புலவரே, திரும்ப வேண்டும் உடனே?

புலவர் : அது என் கடனே.

## சத்திமுத்தம்

புலவர் : பாண்டியனூர் நாடினேன்
மாளிகை தேடினேன்
தேரடியில் படுத்துப் பாடினேன்
பிறகு கண் மூடினேன்
விடியப் போர்வை இருந்தது மகிழ்ச்சி கூடினேன்
திருடன் என்று பிடித்தார் வாடினேன்.

மனைவி : பிறகு?

புலவர் : அரசர் உன்னைச் சிறைப்படுத்தினேன் என்றார்
பல்லையே பல்லால் மென்றார்
கண்ணால் என்னைத் தின்றார்
பிறகு சிரித்து நின்றார்

மனைவி : அரசர் உங்களையா புடைத்தார்?

புலவர் : இல்லை சிறையில் அடைத்தார்
என் பசியின் எலும்பை உடைத்தார்
பதினாறு வகைக் கறியோடு படைத்தார்
அப்ப வகையை என் வாயில் அடைத்தார்
என் அச்சம் துடைத்தார்.

மனைவி : அப்படியா?

புலவர் : இப்படியே கழிந்தது பகலிரவு—நேரம்
தீர்ந்தது நாலு வாரம்.

மனைவி: பின்பு?

புலவர்: அரசர் என்னைக் கண்டார்
போகவிடை கேட்டேன் ஒப்புக் கொண்டார்
ஆனால் உடனே திரும்ப வேண்டும்
என்றுவிண்டார்

மனைவி : ஐயையோ கோலமிட்டேன் மெழுகி
எண்ணெய் இட்டு முழுகி
என்மேல் அன்பு ஒழுகி
தங்கி இராவிடில்
என மனம் கெட்டு விடாதா அழுகி?

பாப்பா : அப்பா?
நீங்கள் போகாவிட்டால் தப்பா?

மனைவி : மேலும்
வானத்தை மூட்டியிருக்கிறது மப்பா
வழியில் நனைவதில் தித் திப்பா?

புலவர் : அட சுப்பா?
சின் னப்பா
ஏன் குப்பா

இப்போது போகவேண்டியது கண்டிப்பா?

குப்பன் : போகலாம் விடிந்தால்.

புலவர் : அரசர் கடிந்தால்?

குப்பன் : எங்கள் கால் ஒடிந்தால்?
நாங்கள் மடிந்தால்
முடிந்தால் தானே ஐயா?

புலவர் : சரி போவது நாளை
ஏனென்றால் வருத்திக்கொள்ளக்கூடாது தோளை

புலவர் : ஏன் அழுகிறாய் பாப்பா?
கையை உறுத்துவது தங்கக் காப்பா?

பாப்பா : இவ்வளவு கெட்டியா போப்பா?

புலவர் : பொன்னாச்சி, சின்ன பிள்ளை
அழுகிறானே ஏன்?

பொன் : முக்கனியும் தேன்
அதைவிட்டு அவன், மான்
வேண்டும் என்றழுகின் றான்.

புலவர் : என்ன அதுபார் அந்த மூலை!

பொன் : ஆம். கல்லிழைத்த மாலை
கழற்றி எறிந்தேன் பழைய வேலை.

புலவர் : ஏன் கணக்கப் பிள்ளை
அந்தத் தங்கப் பெட்டியில் என்ன பழுது?
மூன்றாவது வீட்டுக்காரன்
இருக்கிறானே விழுது
அவன் ஆயிரம் பொற்காசு
கடன் கேட்கிறானே; தொலை அழுது
அந்தக் கல்விக் கழகத்திற்குப்
பத்தாயிரம் கொடு தொழுது
நாலாயிரமா செலவு இன்றைப் பொழுது
கூட்டு முழுது
விடாமல் எழுது.

கணக் : நம் ஆடு
மந்தை மாடு
சென்று காடு
மேய்ந்து வீடு
வந்து அடங்கக் கொட்டகை போடு
என்றார் நம் மன்றாடு.

புலவர் : ஓ நல்ல ஏற் பாடு
மேம் பாடு
பெற ஆவன தேடு.

கணக் : என்ன பிற் பாடு

புலவர் : நாடோறும் நம் யானை
தின்னும் வெல்லப் பானை
எத்தனை? அதனோடு சேர் தேனை
வேளைக்கு இருமூட்டை அரிசி
வைக்கச்சொல் ஓட்டு வானை

கணக் : அதுசெல்வத்தில் அமிழ்கின்றது
கவளத்தை உமிழ்கின்றது!

புலவர் : ஏன்? அரிசியுடன் கலந்த தவிட்டாலோ?
அல்லது தெவிட்டாலோ?
குடி தாங்கி வருகிறாள்

குடி : வீட்டில் யார்?

புலவர் : யார் நீர்
உரைப் பீர்?

குடி : கையில் கொடி தாங்கித்
தலையில் முடிதாங்கி
இந்தப் படிதாங்கி
வாழும் மன்னரோ நீர்!

புலவர் : நீர் யார் தடிதாங்கி?

குடி : தெரியாதா? நான்தான் குடிதாங்கி;

புலவர் : என்ன சேதி?

குடி : உன் சொத்தில் என்ன மீதி?
அதிலே பிரித்துக் கொடு பாதி.
அதுதான் நீதி.

புலவர் : நீ என் அப்பனுக்குப் பிறந்தாயா?

குடி : நான் பங்காளி என்பதை மறந்தாயா?

புலவர் : அவ்வளவு நீ சிறந்தாயா?

குடி : நீ உறவைத் துறந்தாயா?
அல்லது இருக்கிறாயா? இறந்தாயா?

புலவர் . போ வெளியே.

குடி : அடஎங் கிளியே
கம்பங் களியே
அட அச்சங் கொளியே
மான மில்லையா துளியே
இருந்தால் பிரி உடமையே.

புலவர் : அடடா விளக்கி விட்டார் கடமையை
என்னிடம் காட்டாதே உன் மடமையை
ஓடிவிடு படுவாய்.

குடி : அட பையலே நீ கெடுவாய்.
(இருவருக்கும் சண்டை)

புலவர் : இதென்ன என் கையோடு வந்து விட்டது!
இவன் தாடியா?
இது இவன் முக மூடியா?
இவனோர் கூத் தாடியா?
(குடிதாங்கியே பாண்டியன் என்று அறிந்து)

அரசர் : உங்கட்குத் தொல்லை விளைக்க லானேன்
தங்களின் நிலை நலந் தானே?

பாட்டு

புலவர் :

வெறும்புற்கை யுமரி தாங்கிள்ளைச்
சோறும்என் வீடுவரும்
எறும்புக்கும் மாப்பதம் இல்லைமுன்
னாள்என் இருங்கலியாம்
குறும்பைத் தவிர்த்த குடிதாங்கி
யைச்சென்று கூடியபின்
தெறும்புற்கொல் யானை கவளங்கொள்
ளாமல் தெவிட்டியதே
அங்கும் என்னைக் காத்தீர்கள்
இங்கும் செல்வம் சேர்த்தீர்கள்.

பாண்டி : புலவரே! நாராய் நாராய் என்ற
அப்பாட்டுக்கு அளித்தேன்
அத்தனை பொன்னையே!
இப்பாட்டுக்கு அளித்தேன்
நான் என்னையே!

□ □ □